எப்படிச் செய்வது என்பதை மாண்புமிகு அம்மா அவர்களைக் கலந்து இந்த அரசு சிந்திக்கும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 249, திரு. ப. அரசன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

249—

கூட்டுறவு நூற்பாலை

***23414—திரு. ப. அரசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் சம்பள உயர்வு குறித்த பேச்சுவார்த்தையைத் தொடங்கும் எண்ணம் ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் சம்பள உயர்வு குறித்துப் பேசுவதற்கு தொழில் தகராறு எதுவும் எழுப்பப்படவில்லை. தொழிலாளர் நலத் துறையை அணுகவும் இல்லை. அரசிடம் இது தொடர்பான எந்தப் பிரச்னையும் நிலுவையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. அரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி, தொழிலாளர் உதவி ஆணையர் அவர்கள் 4-3-2003 அன்று புதுக்கோட்டை மாவட்ட நூற்பாலையினுடைய தனி அலுவலருக்கு ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறார்.

அந்தக் கடிதத்தில் 11-12-1998 ஆம் தேதிய இருதரப்பு ஒப்பந்தத்தில் ஏற்கெனவே நிர்வாகம் ஒப்புக்கொண்டுள்ளவாறு 1-1-2000 முதல் தொழிலாளர்களுக்கு பிற கூட்டுறவு நூற்பாலைகளிலே கொடுக்கப்படும் சம்பளத்தை வழங்குமாறு நிர்வாகம் கேட்டுக்கொள்ளப்படுகிறது என்று

அறிவுறுத்தி கடிதம் அனுப்பியிருக்கிறார். நான் மாண்புமிகு அமைச்சரிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது என்ன என்று சொன்னால், இப்படி ஓர் உத்தரவு உங்கள் துறையிலேயிருந்து புதுக்கோட்டை மாவட்ட கூட்டுறவு நூற்பாலையின் தனி அலுவலருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்து அந்தத் தொழிலாளர்களுக்குக் கூடுதல் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 18(1) settlement இதற்குப் போடப்பட்டிருக்கிறது. அதாவது நிர்வாகமும் தொழிலாளர்களும் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தி, அந்தப் பேச்சுவார்த்தையின் அடிப்படையில் 1-1-1999 முதல் 31-12-2001 வரை 3 ஆண்டு காலத்திற்கு ஓர் ஒப்பந்தம் அதிலே போடப்பட்டிருக்கிறது. இப்போது அந்த ஒப்பந்தம் முடிந்ததற்குப் பிறகு சம்பள உயர்வு குறித்த பேச்சுவார்த்தையை அவர்கள் தொடர்ந்து நடத்த வேண்டும். அப்படி எந்தத் தாவாவும் எங்களுக்கு, நம்முடைய அரசுக்கு தொழிலாளர்களின் சார்பிலே வரவில்லை. இருந்தாலும் அரசு இதை கவனத்தில் எடுத்துக்கொண்டு, அவர்களை அழைத்துப் பேசி, சம்பள உயர்வு அந்தத் தொழிலாளர்களுக்குக் கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ப. அரசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல திருச்சிராப்பள்ளி தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்திலே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு, அதிலே இரண்டு தரப்பு, தொழிலாளர் தரப்பு, நிர்வாகத் தரப்பு ஆகிய இரண்டு பேரும் கலந்துகொண்டு 500 ரூபாய் கூடுதலாக சம்பளம் தருகிறோம் என்று ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டு இருக்கிறார்கள். அதை அமல்படுத்த வேண்டுமென மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, settlement எதுவும் நடைபெறவில்லை. ஆனால் பேச்சுவார்த்தை அப்படி நடந்திருக்கிறது. தொழிலாளர் நலத்துறை உதவி ஆணையர் அவர்களை அழைத்துப் பேசியிருக்கிறார். அது தொடர்பான

2003 ஏப்ரல் 11]

தொடர் நடவடிக்கையை அரசு தொடர்ந்து எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 250, திரு. அ. சிவபெருமாள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

250—

சேமிப்புக் கிடங்கு

***15184—திரு. அ. சிவபெருமாள்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் தொகுதியில் வேளாண் விளைபொருள் சேமிப்புக் கிடங்கு கட்டித்தர அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. அ. சிவபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. தமிழகத்தினுடைய பரப்பளவில் இரண்டாவது பெரிய தொகுதியாக விளங்கும் ஒட்டப்பிடாரம் வறுமைக் கோட்டுக்குக் கீழே வாழும், விவசாயப் பெருமக்கள் அதிகமாக வாழும் பகுதியாகும். வானம் பார்த்த பூமியை நம்பி வாழ்கின்ற மக்கள் ஆவர். விவசாயத்தைத் தவிர மற்ற எந்தத் தொழிலும் அந்தப் பகுதியிலே இல்லாத ஒரு சூழ்நிலை நடைபெற்று வருகிறது. மழை பெய்த காலங்களில் பயிரிடும் வத்தல், பருத்தி, நவதானியங்கள், இவற்றுக்கு ஏற்ற விலை வரும் வரை அவற்றைப் பாதுகாப்பாக வைப்பதற்கு அங்கே உள்ள மக்களுடைய வீடுகள் வசதியாக இல்லை. ஆகவே அவற்றைப் பாதுகாப்பாக வைத்து, நல்ல விலை கிடைக்கும்போது அவற்றை விற்பனை செய்யத் தகுந்த சேமிப்புக் கிடங்கு அமைப்பதற்கு அரசு வரும் நிதியாண்டிலாவது ஆவன செய்யுமா என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் கடம்பூர்.